**<u>இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.</u>**

**<u>O.S. 69/2022</u>**

**<u>Date</u> : 29.01.2026**

**<u>வா.சா. 1</u> – வில்சன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**<u>1 முதல் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

நான் சிறக்கரை CSI சர்ச்சில் என்ன பொறுப்பில் இருக்கிறேன் என்றால் 16 ஆண்டுகளாக பொருளாளராக இருந்து வருகிறேன். மேலும் 16 ஆண்டுகளாக கமிட்டி உறுப்பினராக இருந்துள்ளேன் என்றால் சரிதான். எந்த ஆண்டு கோவிலை இடித்து புதிதாக கட்டுவதற்கான தீர்மானம் போடப்பட்டது என்றால் 2011. 2011 ம் வருடம் நான் பொருளாளர் என்றால் இல்லை. நான் கட்டிட கமிட்டி உறுப்பினராக இருந்தேன் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணம் எந்த ஆவணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கட்டிட கமிட்டி உறுப்பினராக இருந்தேன் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கட்டிட கமிட்டி உறுப்பினராக இருந்த போது என்ன பொறுப்பு கொடுக்கப்பட்டது என்றால் உறுப்பினராக இருந்தேன். பொறுப்பு எதுவும் கிடையாது.

நான் பணம் வசூல்செய்து கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். எவ்வளவு பணம் வசூல் செய்து கொடுத்தேன் என்றால் உத்தேசமாக ரூ. ஐம்பதாயிரம் இருக்கும். பணம் வசூல் செய்த சமயத்தில் ரசீது கொடுத்தேனா என்றால் அலுவலக அதிகாரிகளிடம் தான்

ரசீது இருக்கும் என்னிடம் இருக்காது நான் அவர்களுடன் செல்வேன். நான் எவ்வித தொகையும் வசூல் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சர்ச்சில் சர்ச் கட்டிட கமிட்டி அடிக்கடி நடக்கும் என்றால் சரிதான். மேற்படி கூட்டத்தில் கருத்து சொல்ல அனுமதி உண்டு என்றால் சரிதான் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மேற்படி கட்டிட கமிட்டி 2011 ல் இருந்து எப்போது வரை செயல்பட்டு வந்தது என்றால் 2025 வரை. 2025 ல் புதிய சர்ச் கட்டிடம் கட்டப்பட்டு அர்ச்சிக்கப்பட்டு விட்டது என்றால் சரிதான். நான் கட்டிட கமிட்டி உறுப்பினர் பதவியை தற்போது வரை ராஜினாமா செய்யவில்லை என்றால் சரிதான். நான் கட்டிட கமிட்டி உறுப்பினர் என்பதால் கட்டிட கமிட்டி எடுக்கும் முடிவு அனைத்தும் என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரிதான்.

CSI சர்ச் நிர்வாகத்தில் ஒவ்வொரு மூன்று ஆண்டுக்கு ஒரு முறை சர்ச்நிர்வாகம் தேர்தெடுக்கப்படும் தேர்தல் நடக்கும் என்றால் சரிதான். அவ்வாறு தேர்தல் நடப்பதற்கு முன்பு பொதுக்குழு கூட்டம் நடைபெறும் என்றால் சரிதான் ஆனால் பொதுக்குழு கூட்டாமலேயே தேர்தல் நடத்துவார்கள். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ பொதுக்குழு கூட்டாமலேயே தேர்தல் நடத்துவார்கள் என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2011 முதல் 2025 வரையிலும் 5 தேர்தல்கள் நடைபெற்றிருக்கும் என்றால சரிதான். பொதுகுழு கூட்டம் முறையாக நடைபெறவில்லை என்றால் CSI தேர்தல் ஆணையரிடம் முறையிடலாம் என்றால் சரிதான். மேற்படி முறையீட்டிற்கு கட்டணமாக ரூ.3000/- கட்ட வேண்டும் என்றால் சரிதான். மேற்படி கட்டணம் கட்டி தேர்தல் அதிகாரியிடம் மனு கொடுத்ததை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கட்டணம் கட்டி தேர்தல் அதிகாரியிடம் மனு கொடுத்ததை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிறக்கரை CSI சர்ச்சில் நடைபெற்ற அனைத்து தேர்தலுக்கு முன்பாகவும் பொதுக்குழு கூட்டம் முறையாக நடைபெற்றால் தான் தேர்தல் அனுமதி பெற முடியும் என்றாலும் பொது குழு கூட்டம் நடத்தி முடித்தால் தான் பேராயம் தேர்தலுக்கு அனுமதி வழங்கும் என்றால் அனுமதி வாங்கவில்லை.

முறையாக தேர்தல் அனுமதி பெறவில்லை என்று பேராயத்திற்கு மனு கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி 5 தேர்தலுக்கு முன்னால் நடந்த பொதுக்குழு கூட்டத்தில் அனைத்து கணக்கு வழக்குகளும் கட்டிட கணக்குகள் உட்பட ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. பெரும்பான்மையின் அடிப்படையில் தான் முடிவுகள் பொதுக்குழு கூட்டத்தில் எடுக்கப்படும் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் கட்டிட வளர்ச்சிக்கு தனி வங்கி கணக்கு தொடங்கப்பட்டதையும் அதனை நிர்வகிக்க நான்கு மற்றும் 7 பிரதிவாதிகளுக்கும் செல்வன் என்ற நபருக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி செல்வனை கட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் ஆம் சேர்த்துள்ளேன். நான் சர்ச்கமிட்டி உறுப்பினராக இருந்ததால் எப்போது வேண்டுமானாலும் அலுவலகத்திற்கு சென்று கணக்கு வழக்குகளை பார்வையிட உரிமை உண்டு என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் எட்வின் சாம் என்பவரை கையகப்படுத்தி பணத்தை ஏமாற்றி பெற்றுள்ளதாக

கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

அவ்வாறு வங்கி அதிகாரியை சுவாதீனப்படுத்தி வங்கிபணத்தை கையாடல் செய்தால் அது குற்ற வழக்கு என்றால் சரியல்ல. நான் வங்கி அதிகாரியையோ எட்வின்சாம் என்பவரை வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சிரியல்ல. அ.வஎண்.182/2021 ல் மேற்படி நபர்களை கட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். வங்கி அதிகாரியையோ எட்வின்சாம் என்பவர் மீது ஏதேனும் குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வங்கி அதிகாரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. மேற்படி நான் கூறும் சம்பவம் எதுவும் நடக்கவில்லை நான் நடந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வங்கி அதிகாரிகள் மீது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது முதல் விசாரணையில் 2019 ம் ஆண்டு 86,00,000/- லட்சம் ரூபாய் பிரித்து எடுத்ததாக சொல்லியுள்ளேன் அதனை காண்பிப்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம் தாக்கல் செய்துள்ளேன்.

சிறக்கரை CSI சர்ச்சில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்றால் 550 தற்போது 600 உறுப்பினர்கள் உள்ளனர். நான் எனது முதல் விசாரணையில் 260 உறுப்பினர்கள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் அந்த சமயத்தில் 260 உறுப்பினர்கள் தான் உள்ளனர். சிறக்கரை CSI சர்ச்சில் மொத்தம் 100 க்கும் குறைவான உறுப்பினர்கள் தான் இருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணை வாக்குமூலம் 2025 ம் ஆண்டு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சிறக்கரை CSI சர்ச் சிறிய ஊர் என்பதால் 86 லட்சம் ரூபாய் வந்தது என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. மேற்படி

கையாடல் குறித்து ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி கையாடல் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்வது என்றால் சரியல்ல. நான் மேற்படி சீட்டில் உறுப்பினராக சேர்ந்தேனா என்றால் சேர்ந்தேன் அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

ரூ.1,30,000/- ரூபாய்க்கான பழைய பொருட்களை விற்றதாக குறிப்பிட்டுள்ளேன் யாரிடம் விற்றார்கள் என்றால் ஏலம் விட்டார்கள். மேற்படி சர்சை எவ்வித தொகையும் ஏலம் மூலம் விற்கப்படவில்லை என்றால் சரியல்ல. சர்ச்சில் என்னென்ன பொருட்கள் விற்க்கப்பட்டார்கள் என்றால் ஆஸ்பெட்டாசீட், கம்பிகள் மற்றும் பல. அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது முதல் விசாரணையில் 66 லட்சம் ரூபாய்க்கு மண் விற்றார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மண் கனிமவளம் சார்ந்தது என்றால் சரிதான். கனிமவளம் அனைத்தும் அரசுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அரசுக்கு தெரியாமல் கனிமவளங்களை எடுத்து விற்பனை செய்வது குற்றம் என்றால் சரிதான். ஆகையால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை போலீசார் சேர்ந்து தான் மண்ணை சுவாதீனம் எடுத்து கட்டிடம் கட்டினார்கள். போலீசார் சுவாதீனம் எடுத்தது குறித்து SP யிடம் புகார்கொடுத்தேனா என்றால் இல்லை.

இந்த வழக்கில் சிறக்கரை CSI சர்ச்சையோ கட்டுமான குழுவையோ தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் சர்ச்சின் கணக்கு வழக்குகளை பார்க்காமல் மேற்படி கையாடல் குறித்து கூறுவது தவறு என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில்

கூறுவது போல் எந்த தொகையும் சிறக்கரை CSI சர்ச்சில் கையாடல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தேர்தல் குறித்து முன் விரோதத்தை வைத்து நான் காரணமின்றி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கட்டிடவேலை தொடங்கி முடியும் வரை நான் கட்டிட கமிட்டி உறுப்பினராக இருந்ததால் கட்டிடகமிட்டி செய்த அனைத்து செயல்களுக்கும் நான் உடந்தை என்றால் சரியல்ல. ஆகையால் நான் தற்போது வரை எனது பதவியை ராஜினாமா செய்யவிலலை என்றால் சரியல்ல. நான் உரிய கணக்கு வழக்குகளை காட்டும் பதவியில் உள்ளேன் கணக்கு வழக்குகளை கேட்கும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.

நான் சிறக்கரை CSI சர்ச்சின் மேல் அ.வ.எண்.182/2021 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் நான் இதே பிரதிவாதிகளை கட்சியாக சேர்ததுள்ளேன் என்றால் சரிதான். அதனால் இவ்வழக்கை இரண்டாவதாக தாக்கல் செய்ய சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.182/2021 என்ற வழக்கை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கட்டிட கமிட்டிக்கு தனியாக அலுவலகம் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது அனைத்து ஆவணங்களும் அலுவலகத்தில் வைக்கப்பட்டு அனைத்து உறுப்பினர்களும் நான் உட்பட பார்வையிட்டு பரிசீலித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேலும் ஞாயிறு ஆராதனையில் செலவுகள் அனைத்தும் வாசிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சர்ச் தேர்தலில் பல ஆண்டுகளாக

பொறுப்பில் இருந்து தற்போது நடந்த தேர்தலில் தோல்வியடைந்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்ன பரிகாரம் தேவை என்றால் 2011 முதல் 2025 வரை வரவு செலவு கணக்கு மொத்தமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். பொதுக்குழு தீர்மானம் போடப்பட்டு நானும் உறுப்பினராக உள்ளதால் வழக்கு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் இந்த வழக்கை பொறுத்தவரையில் எனக்கு எந்தவிதமான கோரிக்கைகளையும் நிறைவேற்ற கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கின் பரிகாரத்தையும் மேற்படி அ.வ.எண்.182/2021 என்ற வழக்கில் தான் கேட்டிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. அனைத்து விதமான கணக்குவழக்குகளையும் பார்வையிட்ட பின்பும் தேவையில்லாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**1 முதல் 3 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**